நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 21 புதன்கிழமை 05 - 07 - 2000 VALAMPURI ஒலி 198

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## நாகர்கோவிலின் தென்பகுதியில் இராணுவம் - புலிகள் மோதல்!

நாகர்கோவிலின் தென் பகுதியில் நேற்று காலை படையினர் விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கி இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்ட போது அங்கு இரு பகுதியினருக்குமிடையே கடும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கரும்புலிகள் தினம்
### வன்னியில் அனுஷ்டிக்கப்படுகிறது

(வவுனியா)

வன்னிப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இன்று கரும்புலிகள் தினம் இயாக உணர்வுடன் அனுஷ்டிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை யாழ். குடாநாட்டின் பலபகுதிகளிலும் இத்தினம் தொடர்பாக பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## ★ அதிகாரப் பரவலாக்கல் திட்டப் பொதியுடன்
# அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி
# நேற்று புதுடில்லி பயணமானார்

## பிரதமர் வாஜ்பாயைச் சந்திப்பார்

(கொழும்பு விசேட நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக புதிய அணுகு முறைமை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட தூதுவராக பௌத்தசாசன கலாசார அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி மூன்றுநாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று புதுடில்லி சென்றுள்ளார்.**

**ஜனாதிபதியின் விசேட செய்தியுடன் புதுடில்லி சென்றுள்ள அமைச்சர் இந்திய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயையும், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கையும் இனப்பிரச்சினை தொடர்பாக சந்தித்துப் பேசவுள்ளார்**

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியின் விசேட தூதுவராக புதுடில்லி சென்றுள்ள பௌத்த சாசன கலாச்சார அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன ஜெயக்கொடியுடன் ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டியும் புதுடில்லி சென்றுள்ளார்.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயையும் வெளியுறவு அமைச் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகளுக்கு நாளை பயணச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்வதற்கு முன்கூட்டியே பதிவு செய்து இலக்கம் பெற்றுக் கொண்டவர்களில் 1 ஏ தொடக்கம் 250 ஏ வரை (6 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் கைதுசெய்யப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில் வைத்து இளைஞர் ஒருவர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்தமாதம் 28 ஆம் திகதி இக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண இதுவே கடைசிச் சந்தர்ப்பம்!

### அகில இலங்கைப் பிக்குமார் சங்கம்

(கொழும்பு)

ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கு இதுவே கடைசித் தருணம் என்று அகில இலங்கைப் பிக்குமார் சங்கம் தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவித்துள்ளதாவது; உத்தேச அரசியல் யாப்புத் தொடர்பாக மக்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் தத்தமது கருத்துக்களை ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரிவிக்கவேண்டும்.

ஜனாதிபதியின் இராஜதந்திரமும் எதிர்க்கட்சித் தலைவரின் புத்திசாதுரியமும் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் வெற்றியைத் தேடித்தந்துள்ளன. இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிக்கு களங்கம் ஏற்படுத்தும் வகை (6 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி செல்வதற்கு இராணுவம் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்கு தெற்குப் பகுதிகளில் இருப்பவர்கள் தங்கள் வீடுகளில் உள்ள பொருட்களை ஏற்றிவரச் சென்றபோதிலும் ஏமாற்றத்துடன் திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

கொடிகாமத்தில் இருந்து இராணுவத்தினரின் அனுமதி பெற்று வாகனங்கள் சகிதம் (6 ஆம் பக்கம் பார்க்க

## கரும்புலிகள் தினத்தையொட்டி மட்டுநகரில் பாதுகாப்புத் தீவிரம்

(மட்டக்களப்பு)

இன்று கரும்புலிகள் தினத்தையொட்டி மட்டக்களப்பு நகரத்திலும் மற்றும் அம்மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றிற்கு அருகில் கைத் துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்ற கட்டடத்திற்கு அருகாமையில் அனாதரவாக விடப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றை மீரிகம பொலிஸார் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கைத்துப்பாக்கி மீட்கப்பட்டதை அடுத்து அப்பகுதி மீரிகம பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது இத் தேடுதலின் போது ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## உணவுப்பொருள் விலை உயர்வை கண்டித்து 18 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவுஉயர்வு, உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு ஆகியவற்றைக் கண்டித்து இம் மாதம் 18 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏற்பாடுகள் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை எதிர் வரும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் பாதுகாப்பு நிதிய தாக்குதல் சமாதானத்திற்கு விடப்பட்ட சவால்!

### மக்கள் சமாதான முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வினைக் காண்பதற்காக முயற்சித்து வரும் சகல அமைப்புக்களையும் பாதுகாப்பதற்கு அரசு உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று மக்கள் சமாதான முன்னணி அரசிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.**

அண்மையில் நோர்வேயின் தூதுவர் கொழும்பு வந்திருந்த சமயம் சிறுவர் பாதுகாப்பு நிதியம் தாக்கப்பட்ட சம்பவம் சமாதான அமைப்புகளுக்கு விடப்பட்ட ஒரு எச்சரிக்கையாக கருத வேண்டியுள்ளது என்று மக்கள் சமாதான முன்னணி தெரிவித்துள்ளது

இச்சம்பவம் தொடர்பாக மக்கள் சமாதான முன்னணி (6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### O/L MATHS, ENGLISH

Distinction. Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து Paper Class வரை கற்பிக்கப்படும் (ஆண்டு 9, 10 உட்பட) ஆசிரியர், 85, சிவன்கோவிலடி, சிவன்கோவில் பின்புறம், திருநெல்வேலி. (1443)

### திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல் சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கன் புகைப்படத்துறையைச் சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி 301, கஸ்தூரியார் வீதி, மேல் மாடி கன்னாதிட்டிச் சந்திக் கருகில் யாழ். (1377)

### உடன்விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் பாவனையில் இருக்கும் 1 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய மொறிஸ்மைனர் 1000 வைக்கன் மொடல்கார் விற்பனைக்குண்டு. தொடர்பு - ஆ - சிவராசா மல்லிகாமிக்ஷர் தொழிலகம், கூழாவடி, ஆனைக் கோட்டை (1475)

### விற்பனைக்கு

லைற் எஞ்சின். 5 கோஸ் பவர் (பெற்றர்) இங்லன்ட் 3 கிலோடைனமோ, இங்லன்ட் றேடியற்றர்கூலர். (இ ழூவை வண்டியுடன் பொருத்தப்பட்டது) க கந்தசாமி, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (1479)

### தவறிவிட்டது

சமரபாலா யான்சன் என்பவருடைய வி. அடையாள அட்டை (இல:0905022502) தற்காலிக அடையாள அட்டை என்பன யாழ்ப்பாணம் மீன்சந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாலசிங்கம் வீடுதி கொக்குவில் ஸ்ரேசனடி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [1482]

### இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்லவிலை கொடுக்கப்படும் தவ பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைசந்தையடி நல்லூர். [1499]


## 'ராஜா'

யாழ்ப்பாணம்
03-07-2000
முதல் குதுகல
ஆரம்பம்
ரஜனிகாந்த்,
சௌந்தர்யா,
ஜெய்சங்கர், கபாலி,
மனோரம்மா, ரகுவரன்
நடித்த
**அருணாச்சலம்**
புதிய நேரம்: 10.30, 2.00
[இ/555]

## நாகம்ஸ்

சுன்னாகம்

4வது வாரத்தைநோக்கி
கார்த்திக், ரோஜா,
அஜித் நடித்த
**உன்னிடத்தில்
என்னைக்
கொடுத்தேன்**
(தினம்)
11.00, 2.30 (பு.நே)
(இ/468)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

# இராமநாதன் நுண்கலைக் கழகம் நுண்கலைமாணி (இசை|நடனம்| சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி 1999 2000

மேற்படி பட்டப் படிப்பிற்கானகற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியுடையவர்களிடமிருந்து 2000 07.31-ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கற்கை நெறிக்காலம்: நான்கு வருடங்கள்

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்:**

1. 1998, 1999ம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக் கொள்ளப்படும்.
2. க. பொ. த. உயர்தர பெறுபேற்றில் மொத்தப் புள்ளிகள் 180 க்கு குறையாமல் பெற்று பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதி பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

**நுண்கலைமாணி - இசை**

1. கர்நாடக இசை (வாய்ப்பாட்டு)
2. பண்ணிசை
3. கர்நாடக இசை வாத்தியங்கள்
   (அ) வீணை (ஆ) வயலின் (இ) மிருதங்கம்

மேற் குறிப்பிட்ட கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. உயர்தரத்தில் சித்தி பெற்ற பாடங்களில் சங்கீதம் ஒரு பாடமாக இருத்தல் வேண்டும்.

**நுண்கலைமாணி - நடனம்**

நுண்கலைமாணி - நடனம் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. உயர்தரத்தில் சித்திபெற்ற பாடங்களில் பரதநாட்டியம் ஒரு பாடமாக இருத்தல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

1. மாணவரொருவர் பாடநெறிப் பிரிவுகளின் சிறப்புத் தேர்ச்சிக்கான பாடத்தை பிரதான பாடமாகவும், வேறொரு பாடத்தைத் துணைப்பாடமாகவும், தெரிவுசெய்தல் வேண்டும். வாத்தியம் ஒன்றில் சிறப்புத் தேர்ச்சி பெறும் ஒருவர் வாய்ப்பாட்டினைத் துணைப்பாடமாகவும், பரத நாட்டியத்தில் சிறப்புத் தேர்ச்சி பெறும் ஒருவர் வாய்ப்பாட்டு அல்லது மிருதங்கத்தையே துணைப் பாடமாகவும் கொள்ளல் வேண்டும்.
2. பிரதானபாடமாக எந்தப்பாட நெறியினை ஒருவர் மேற்கொள்ள விருப்புகின்றாரோ அதே பாட நெறிக்குத் தகைமையுள்ளவராக அவர் இருக்கவேண்டும். அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

**நுண்கலைமாணி சித்திரமும் வடிவமைப்பும்**

க.பொ.த உயர்தர தகைமையுடன் பல்கலைக் கழகத்தால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் (Aptitude Test) சித்தியடைதல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் க.பொ.த உயர்தர பெறுபேற்றுப் பத்திரத்தினதும் மொத்தப் புள்ளிகளினதும் போட்டோப்பிரதி இணைக்கப்பட வேண்டும்.

க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் மட்டும் சித்தி பெற்றோர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றமையை நிருபிக்கும் ஆவணத்தின் போட்டோப் பிரதியும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

மேற்குறித்த கல்வித்தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, குறிப்பிட்ட ஆவணத்தின் போட்டோப்பிரதி இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவுத் தேதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் கரும பீடத்திலோ. யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ளமக்கள் வங்கிக் கிளையிலோ. ரூபா 50/ ஐ செலுத்திய பற்றுச்சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும்கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொண்ட காசுக்கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசமிடப்பட்ட 20×10 செ.மீ அளவுள்ள கடித உறையை யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், 154, ஆட்டிப்பட்டித்தெரு, கொழும்பு - 13 தொலைபேசி இல:- 435620 எனும் முகவரிக்கு அல்லது உதவிப்பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்டபடிப்புத்துறைக்கு விண்ணப்பித்தலாகாது. விண்ணப்பங்கள் 23×10 செ.மீ அளவு கொண்ட கடித உறையில் இடது பக்க மூலையில் நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி:-
உதவிப்பதிவாளர்/ கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(03 07 2000)

(இ 630) பதிவாளர்.

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன் மாதம் 26-ம் திகதிகளில் யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவிலக்கங்கள் பிரதேச செயலர்ரீதியாகத்தரப்படுகின்றன.

**சங்கானை**

| | |
|---|---|
| 131827 ஏ | 131827 பி |
| 141380 ஏ | 141380 பி |
| 143750 ஏ | 143750 பி |
| 143756 ஏ | 143757 ஏ |
| 143108 ஏ | 143108 பி |
| 13245 ஏ | 13245 பி |
| 13245 சி | 13245 டி |
| 13245 ஈ | 13245 எவ் |
| 144139 ஏ | 147061 ஏ |
| 147061 பி | 147260 ஏ |
| 147357 ஏ | 147367 ஏ |
| 147394 ஏ | 147394 பி |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 136174 ஏ | 144766 ஏ |
| 144766 பி | 145115 ஏ |
| 142815 ஏ | 142815 பி |
| 142815 சி | 143144 ஏ |
| 144254 ஏ | 144254 பி |
| 144284 ஏ | 144290 ஏ |
| 144290 பி | 144341 ஏ |
| 144341 பி | 144370 ஏ |
| 144396 ஏ | 144465 ஏ |
| 144466 ஏ | 144467 ஏ |
| 144477 ஏ | 144481 ஏ |
| 144481 பி | 144497 ஏ |
| 144497 பி | 144497 சி |
| 144497 டி | 144559 ஏ |
| 144610 ஏ | 1446 0 பி |
| 144648 ஏ | 144648 பி |
| 144744 ஏ | 144759 ஏ |
| 147847 ஏ | 147846 பி |
| 147847 சி | 147906 ஏ |
| 147906 பி | 147906 சி |
| 147960 ஏ | 147977 ஏ |
| 147977 பி | 148016 ஏ |
| 148016 பி | 148016 சி |
| 148016 டி | 148036 ஏ |
| 148036 பி | 148082 ஏ |
| 148082 பி | 148082 சி |
| 148095 ஏ | 148095 பி |

**ஊர்காவற்றுறை**

| | |
|---|---|
| 13165 ஏ | 13166 பி |
| 13166 பி | 13176 ஏ |
| 13191 ஏ | 13240 ஏ |
| 13273 ஏ | 13273 பி |
| 13273 சி | 13273 டி |
| 13279 ஏ | 13279 பி |
| 13280 ஏ | 13281 ஏ |
| 13282 ஏ | 13282 பி |
| 13285 ஏ | 13285 பி |
| 13286 ஏ | 13286 பி |
| 13298 சி | 13286 ஏ |
| 13298 பி | 13302 ஏ |
| 13302 பி | 13302 சி |
| 13302 டி | 13302 ஈ |
| 13304 ஏ | 13310 ஏ |
| 13311 ஏ | 13312 ஏ |
| 13313 ஏ | 13314 ஏ |
| 13315 ஏ | 13320 ஏ |
| 13323 ஏ | 13323 பி |
| 13328ஏ | 13339 ஏ |
| 13340 ஏ | 13342 ஏ |
| 13342 ஏ | 13347 ஏ |
| 13847 பி | 15356 ஏ |
| 13356 பி | 13356 சி |
| 13356 டி | 13370 ஏ |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 133191 ஏ | 143318 ஏ |
| 142318 பி | 143319 ஏ |
| 143320 ஏ | 143320 பி |
| 143320 சி | 143320 ஈ |
| 143320 எவ் | 143323 ஏ |
| 143323 பி | 143323 சி |
| 143390 ஏ | 143391 ஏ |

| | |
|---|---|
| 143391 பி | 143391 ஏ |
| 145139 ஏ | 145139 பி |
| 145195 ஏ | 147676 ஏ |
| 147676 பி | 147676 சி |
| 147689 ஏ | 147689 ஏ |
| 147689 பி | 147689 சி |
| 147703 ஏ | 147703 பி |
| 143360 ஏ | 143360 பி |
| 143360 சி | 143360 சி |
| 143382 ஏ | 143382 பி |
| 143389 ஏ | 143393 ஏ |
| 143393 பி | 143394 ஏ |
| 143394 பி | 143395 ஏ |
| 143395 பி | 143398 ஏ |
| 143398 பி | 143400 ஏ |
| 143400 பி | 143400 சி |
| 147639 ஏ | 147639 பி |
| 147639 சி | 148941 ஏ |
| 148941 பி | 148941 சி |
| 148941 டி | 148941 ஈ |
| 148948 ஏ | 149104 ஏ |
| 149104 பி | 119105 ஏ |
| 149105 பி | 144105 சி |
| 149126 ஏ | 149128 ஏ |
| 149128 பி | 149128 சி |
| 149141 ஏ | 149141 பி |
| 149142 ஏ | 149142 பி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 136868 ஏ | 140895 ஏ |
| 140899 ஏ | 140935 ஏ |
| 140982 ஏ | 140983 ஏ |
| 140984 ஏ | 140985 ஏ |
| 140992 ஏ | 140999 ஏ |
| 141001 ஏ | 141002 ஏ |
| 141067 ஏ | 141128 ஏ |
| 141739 ஏ | 145103 ஏ |
| 145104 ஏ | 145104 பி |
| 145111 ஏ | 145114 ஏ |
| 145138 ஏ | 145535 ஏ |
| 145701 ஏ | 145706 ஏ |
| 147638 ஏ | 147638 பி |
| 147638 சி | 147669 ஏ |
| 147669 பி | 147683 ஏ |
| 147683 பி | 147694 ஏ |
| 147695 ஏ | 135913 ஏ |
| 139647 ஏ | 143738 ஏ |
| 143738 பி | 143738 சி |
| 143738 டி | 143738 ஈ |
| 143738 எவ் | 144216 ஏ |
| 144228 ஏ | 144228 பி |
| 144230 ஏ | 146977 ஏ |
| 146977 பி | 146977 சி |
| 146977 டி | 147190 ஏ |
| 147205 ஏ | 147219 ஏ |
| 147219 பி | 147219 சி |
| 147267 ஏ | 147267 பி |
| 147348 ஏ | 147353 ஏ |
| 147369 ஏ | 147377 ஏ |
| 144262 ஏ | 144753 ஏ |
| 144759 ஏ | 144765 ஏ |
| 144770 ஏ | 144776 ஏ |
| 144800 ஏ | 145106 ஏ |
| 145106 பி | 145163 ஏ |
| 145549 ஏ | 145637 ஏ |
| 145645 ஏ | 145668 ஏ |
| 145674 ஏ | 145676 ஏ |
| 145702 ஏ | 145715 ஏ |
| 145716 ஏ | 145717 ஏ |
| 145718 ஏ | |

## குரு பூசை

அகில இலங்கைத் திருமுறை மன்றம் இன்று காலை 8.30 மணி முதல் நல்லூர் ஸ்ரீ பட்டநாதசுவாமி தேவஸ்தானத்தில் இடம் பெறும் ஆலயப் பூசையைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அபிஷேகமும், பூசையும் நடைபெற்று திருவாசகப் பாராயணமும் நடத்தவுள்ளனர். (வ)

### அரசியல் சாசனத்திற்கு அமைய

# ஜம்மு-காஷ்மீர் சுயாட்சி கோரிக்கை தோற்றாலும் கூடமுயற்சி தொடரும்

## முதல்வர் பாரூக் தெரிவிப்பு

(பெங்களூர்)

ஜம்மு - காஷ்மீர் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நாடாளுமன்றம் நிராகரித்தால் கூட அந்தக் கோரிக்கை ஒதுக்கப்படாதென்று ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் டாக்டர் பாரூக் அப்துல்லா கூறினார்

பெங்களூரில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் ஜம்மு - காஷ்மீருக்கு சுயாட்சி வழங்குவது பற்றி தேசிய விவாதம் நடாத்தப்படுவதை தாம் வரவேற்பதாகக் கூறினார்.

அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட வகையில் இவ்விவகாரத்திற் தீர்வு காணப்பட வேண்டும் என்றார்.

தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு முட்டுக்கட்டையாகவே மாநில சுயாட்சிக் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது என்பதை பாரூக் அப்துல்லா மறுத்தார் கொரிய தலைவர்களுக்கு பணமும் ஆயுதமும் பாகிஸ்தான் தருகிறதென்று அவர் குற்றம் சாட்டினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் தமது கட்சி தொடர்வதில் எந்தவித கருத்து முரண்பாடுகளும் இல்லையென்று ஜம்முகாஷ்மீர் முதல் அமைச்சர் தெரிவித்தார்.

(க-து)

## செய்திப்பரல்

★ சீன வெளியுறவுத் துறை அமைச்சர் இம்மாத இறுதியில் இந்தியா செல்ல இருக்கிறார்.

★ பாகிஸ்தான் இந்தியாவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயாராக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

★ பயங்கரவாத ஒழிப்புக்கு இந்தியா இஸ்ரேலுடன் உடன்பாடு கண்டுள்ளது.

★ தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் உட்பட 500 பேர் கைதாகியுள்ளனர். (து)

# எண்ணெய்க் கப்பல் கடலில் மூழ்கியது அபாய நிலையில் பெண்குயின் பறவைகள்

## தென்னாபிரிக்காவில் சம்பவம்

(கேப்டரவுன்)

தென்ஆபிரிக்க கடற்பிராந்தியத்தில் கடந்தவாரம் எண்ணெய்க்கப்பல் ஒன்று மூழ்கியதை அடுத்து ஏற்பட்ட எண்ணெய் கசிவினால் அருகில் உள்ள தீவுகளில் வசிக்கும் 85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்குயின் பறவைகளுக்கு பெரும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பெண்குயின் பறவைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நடவடிக்கைக்கு ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(து)

# தமிழர் எழுச்சி மாநாடு; அத்வானி பங்கேற்றதற்கு காங்கிரஸ் கண்டனம்

(புதுடில்லி)

ஈரோட்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தினால் நடத்தப்பட்ட தமிழர் எழுச்சி மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி கலந்து கொண்டதை காங்கிரஸ் கட்சி கண்டித்துள்ளது.

தவறான வழிக்குத்துணை போகும் வகையிலான செயல் இது என அது குற்றம் சுமத்தியுள்ளது

இதேவேளை ஜம்முகாஷ்மீரில் பாரூக் அப்துல்லா தலைமையிலான அரசு சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது பிரிவினைவாதத்துக்குத் தூண்டுகோல் கொடுப்பது போன்றது என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

(சி)

# பதவியேற்பு நிகழ்வு

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 2000/2001 அரிமா ஆண்டுக்கான புதிய பதவியாளர்களுக்கான பதவியேற்பு வைபவம் இம்மாதம் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் - கோவில் வீதியிலுள்ள 75ஆம் இலக்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கழகத்தின் தலைவர் லயன். எஸ் சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் கடந்த வருடத்தின் வடபிராந்திய 9/10ன் பிராந்தியத் தலைவர் லயன் ஏ. தங்கேஸ்வரன் பிரதம விருந்தினராகப் பங்கு கொள்ளவுள்ளார் (சி-77)

# ம. எண்ணெய் வழங்கல்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி, கொக்குவில் கிழக்கு விவசாய சம்மேளன அங்கத்தவர்களுக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக நேற்றுமுன்தினம் அங்கத்தவர் ஒருவருக்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

(ர-சி)

# முக்கிய கலந்துரையாடல்

ஆரம்ப நெறி ஆசிரியர் சேரிவில் பாதிக்கப்பட்டோர் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் யாழ்ப்பாணம் புதிய உயர் கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (க - 12)

# ஜனாதிபதி அவசர கோரிக்கை

(கொழும்பு)

போர்முனையில் மரணமடைந்த மற்றும் காயமடைந்த, காணாமற் போன படையினரின் குடும்பங்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சேவை முன்னுரிமை அடிப்படையில் இவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ளுமாறு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்க ஊடாக அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்களுக்கு மேற்படி கோரிக்கை ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளது.

(உ)

## மனமொன்றித் தொழுதால்

எடுப்பு

மயிலணி முருகனை மனமொன்றித் தொழுதால்
பயில் லை எல்லாம் வளர்ந்திடும் என்றும்
(மயி)

தொடுப்பு

கயல்விழி மாதராம் வள்ளியும் தெய்வியும்
அயல்வர வீதியில் தரிசனம் தருவாய்
(மயி)

முடிப்பு

ஓடிடும் மாந்தரின் உணர்வினை நோக்கியே
நாடிடும் வரமொன்று நமக்கினி தாகவே
கூடிட குலவிட குப்பிட ஒரு நிலை
தேடினோம் பாடினோம் தேவனே தருவையே
(மயி)

துரையர்

(சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் உற்சவத்தை ஒட்டிய கவிதையாகும்.)

# பாடசாலை மாணவர் இருவரை கடந்த 2ஆம் திகதி முதல் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியை சேர்ந்த இரண்டு பிரபலபாடசாலை மாணவர்கள் இருவர் கடந்த 2 ஆம் திகதி முதல்காணாமல் போயுள்ளதாக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது

மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த ஸ்கந்தவரோதயா கல்லூரி கலைப்பிரிவு மாணவனான சத்தியசீலன் குணசீலன் (வயது-19) மற்றும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி கணிதப் பிரிவு மாணவனான கருணாதேவன் சஜீபன் (வயது-17) ஆகியோரே காணமல்போனவர்களாவர்.

இவர்களுள் கருணாதேவன் சஜீபன் என்பவர் ஊரெழு மேற்கு சுன்னாகம் பகுதியில் வசித்துவந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-12)

# ஒரு தொகுதி மருந்து வகைகள் யாழ். வைத்திய சாலைக்கு வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலைக்கு தேவையான ஒரு தொகுதி மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளதாக மேற்படி வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த சர்வதேச செஞ்சிலுவைக் கப்பல் மூலம் 'பன்டேஜ்' பனடோல் உட்பட முக்கிய மருந்து வகைகள் வந்து சேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த கட்ட மருந்து வகைகள் யாழ். வைத்திய சாலைக்கு தருவிப்பதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-12)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

# பதவியேற்பு வைபவம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 2000/2001 ஆண்டுக்கான நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம்

எதிர்வரும் 09 07 2000 ஞாயிறு காலை 9 மணிக்கு

யாழ். கோவில் வீதி 75 இலக்க பணிமனையில் நடைபெறவுள்ளது.

கழக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்

★ ★

மாவட்ட அதிஷ்டலாபச் சீட்டில் யாழ். மாவட்டத்தில் பரிசு பெற்றோர் விபரம்;

5வது பரிசு: வி தவமணிதேவி டிக்கட் இல. 49843,

6வது பரிசு: எஸ். பாலகிரியா நிகரவதி சங்கானை.

ஆறுதல் பரிசு ;-

1. வி சின்னத்தம்பி டச்சு வீதி, சாவகச்சேரி.
2. ஆர், அந்தோனி 115, ஏ. வி. வீதி, அரியாலை, யாழ்;

செயலாளர்

லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.

(கி 629)


## நவீல்ட் பாடசாலை அறிவித்தல்

சுண்டுக்குளி பரியோவான் கல்லூரி அக்கடமியில் எதிர்வரும் திங்கட்கிழமை (10. 7 2000) காலை 9. 30 மணிக்கு பாடசாலை ஆரம்பமாக இருக்கின்றது. சகல ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் யாவரும் சமுகம்தரவும்.

அனைத்து மாணவர்களின் பெற்றோரும் அன்றைய தினம் அதிபரைத் தவறாது வந்துசந்திக்கவும்.

அதிபர்

(1485)



## கணக்கீடு

திரு பாலவாசன்

A/L 2001

B. B A (F M Spl)

இருப்பு மதிப்பீடு

Tue. Thu - 6-30 a m

ஆரம்: 6.7.2K

நல்லூர்

சயன்ஸ் அக்கடமி

(1473)



## புதுக்கடை திறப்பு விழா

நிகழும் விக்கிரம வருடம் ஆனி 21ம் நாள் [05-07-2000] புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 9.57 வரையுள்ள சுபவேளையில்

தாஜ் பான்சி பலஸ்

TAJ FANCY PALACE

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதால் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

[இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளவும்]

890, காங்கேசன்துறை வீதி,
மதவடி யாழ்ப்பாணம்.

அன்புடன்
V. ரூபன்

(1478)



## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா, மொஸ்கோ போன்ற பல்கலைக்கழகங்களுக்கு கீழ்க்காணும் துறைகளில் கல்வி பயில அனுமதி பெற்றுத் தரப்படும்.

1. மருத்துவம் (ஆங்கிலம்)
2. பொறியியல் (ஆங்கிலம்)
3. கணனியியல் (ஆங்கிலம்)
4. ஏனைய துறைகள் (சட்டம், பொருளாதாரம் போன்றவை)

விண்ணப்ப முடிவு: 15 - 7 - 2000

Dr. க. சிவனடியான். நவாலி,
மானிப்பாய்;

(1428)

# கலாசாரபின்னணிகள் எதுவாயினும் சேவையுள்ளம் ஒன்றாக அமைகிறது

## செஞ்சிலுவை வதிவிட பிரதிநிதி பெருமிதம்

(அரியாலை)

''இன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் ஆரம்ப சுகாதாரப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்படுவதையிட்டு மிகவும் பூரிப்படைகின்றேன். ஆரம்ப சுகாதாரமும் அது சம்பந்தமான கல்வியும் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் இடம்பெயர்வுகளினால் அல்லல்படும் மக்களுக்கும் தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கு மிக உதவியாக இருக்கிறது. யாழ். கிளையின் இச் செயல் மூலம் யாழ். மக்கள் மிகவும் நன்மை அடைவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.''

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உலக செஞ்சிலுவைச் சங்கத்தின நிகழ்வும், புதிய ஆரம்ப சுகாதார கேட்போர் கூடத்திறப்பு விழாவும் யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலைமையில் இருபாலையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதி றொப் றோயுன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் புதிய ஆரம்ப சுகாதார கேட்போர் கூடத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வதிவிடப் பிரதிநிதி மேலும் பேசுகையில், கடந்த இரண்டு மூன்று மாதங்களாக யாழ். கிளையின் தொண்டர்கள் அவசர தேவையின் பொருட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு எனன விதமாக எம்முடன் இணைந்து செயற்பட்டார்கள் என்பதை நான் நேரடியாகக் கண்டுள்ளேன். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள், பாதிக்கப்பட்ட மக்களின் தொகை அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை அறிந்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு சேவைகளை வழங்கினார்கள் என்றார்.

பிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(106-சி)

## கட்டுநாயக்க விமானத் தளத்தில் கைதான 68 தமிழர்களையும் உடன் விடுதலை செய்யவும்

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பயணத்தின் போது கைது செய்யப்பட்ட 68 தமிழர்களையும் விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் கமலசபேசன் நீர்கொழும்பு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த 68 தமிழர்களும் சட்டபூர் விமான விசாச்சீட்டுக்களைப் பெற்று டுபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு செல்ல இருந்த போதே விமான நிலையத்தில் வைத்து நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

கைது செய்யப்பட்ட 68 பேரையும் விடுதலை செய்ய வேண்டுமென சட்ட விரோத கைது மற்றும் தொல்லை தவிர்ப்புக் குழு நீர்கொழும்பு பொலிஸாருக்கு கடந்த வாரம் உத்தரவு விட்டிருந்தது.

இதனை அடுத்தே இவர்கள் நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

(வ)

## கள்வர் கொட்டமடக்குவதற்கு ஈச்சமோட்டையில் விழிப்புக்குழு

(யாழ்ப்பாணம்)

மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்ததைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சாதுரியமாகத் தமது திருட்டுத் தொழிலை நடத்திவரும் பலபேர்வழிகளின் கொட்டத்தை அடக்க ஈச்சமோட்டைப்பகுதியில் விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவையாளரும் பத்திரிகையாளருமான கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கத்தின் ஆலோசனையின் பேரில் வர்த்தகர் திரு. எஸ். தவசீலன் தலைமையில் உருவாகியுள்ள இக்குழு ஊரடங்கு தவிர்ந்த நேரங்களில் தனது பணியைத் திறம்பட ஆற்றி வருகிறது.

இப்பகுதியில் கடந்த வெள்ளி, சனி ஆகிய கிழமைகளில் அடுத்தடுத்து மூன்று திருட்டுச்சம்பவங்கள் நிகழ்ந்ததையடுத்தே இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

'சாம்றொக்' அக்கடமியில் கதவு உடைக்கப்பட்டு பெறுமதிவாய்ந்த மூன்று மேசைகள் திருடப்பட்டன. இம்மேசைகள் மூன்று திருடர்களால் மானிப்பாய் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் திருடர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் 'எஸ். ஏ' என்ற அடையாளம் இம்மேசைகளில் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இரு தேங்காய் திருட்டுச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. முன்னரும் பல தடவைகள் இங்கு இத்தகைய திருட்டுக்கள் நிகழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

(சி)

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 1917 - 03 - 17 |  | 1999 - 07 - 16 |

### அமரர் மூத்ததம்பி பொன்னையா

(பண்டிதர்)

திதி 5.7.2000

ஓடி மறைந்ததோ ஓராண்டு
ஓடாமல் இருப்பதோ உம் நினைவு
எம் குடும்பத்தின் குலதீபமே
எம் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகிறோம்.

திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(1486)

---

## இருமிநாசினி விற்பனையில் மோசடியா?

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, இணுவில் பகுதிகளில் சில இடங்களில் விற்கப்படும் கிருமிநாசினிகள் காலாவதியானவை என்று முறையிடப்படுகிறது.

இதனால் இவற்றை வாங்கும் விவசாயிகள் ஏமாற்றமடைவதுடன் பயிர்களுக்கும் பயனற்றுப் போய்விடுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு சார்ந்த நிறுவனம் ஒன்றில் இத்தகைய குளறுபடிகள் நிகழ்வதாகவும் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்டோர் இது விடயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

(ர-சி)

## மெதடிஸ்ததினம்

(புலோலி)

மெதடிஸ்ததினம் யாழ்ப்பாணம் மெதடிஸ்த பரிசுத்த பேதுரு ஆலயத்தில் எதிர்வரும் 8ம் திகதி கொண்டாடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு பீ. ஜெ. மேதர் தெரிவித்தார்.

(52)

## அடிக்கல் நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் அமைக்கப்படவிருக்கும் புனர்வாழ்வுக் களஞ்சியக் கட்டிடத்துக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டு கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டிடம் சுமார் 10 லட்சரூபா செலவில் கட்டப்படவுள்ளது.

(வ)

## யாழில் மாவிலை குறையவில்லை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் மாவின் விலையை கிலோ ஒன்றுக்கு மூன்று ரூபாவால் குறைத்துள்ளபோதும் யாழ்ப்பாணத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னமும் மாவின் விலையைக் குறைக்கவில்லை என பாவனையாளர் கவலை வெளியிட்டுள்ளனர்.

(வ-4)

## நீண்ட காலம் துன்பம் அனுபவிக்கும் வலி. வடக்கு மக்கள் நலனில் விசேட கரிசனை காட்டப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மக்கள் சொத்து சுகங்களை இழந்து கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பல்வேறு வழிகளிலும் துன்பமுற்று வருகின்றனர். அவர்கள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என்று தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் பத்தாவது கிளையின் தலைவர் கு. சுவக்கொடசம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க மேற்படி கிளையின் நிர்வாக சபைக் கூட்டம் அவ்வையில் நடைபெற்ற போது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வலி. வடக்கு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி கிடைக்கக் கூடியதாக தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சங்கக் கிளைகளில் பொருட்கள் சகலம் தேவைகளையும் பூர்த்திசெய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

எரிபொருள் தேவையை நிறைவு செய்யக் கூடியதாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாரத்திற்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய்யாவது வழங்கப்பட வேண்டும்.

சேமித்து பாதுகாக்கக் கூடிய உள்ளூர் மற்றும் வெளியூர் விவசாய உற்பத்திப் பொருட்களை அறுவடைக் காலத்தில் அந்தந்த ஆண்டுத் தேவைக்கேற்ப கொள்வனவு செய்து சேமித்து வைத்து தட்டுப்பாடான காலத்தில் ஆவன செய்ய வேண்டும்.

உரிய கவனமெடுத்து பாவனையாளர்களுக்கு நல்ல உப்பை விற்பனை செய்வது சிறப்பானது. இதன் மூலம் மொத்தப் பேர்வழிகளின் எடை குறைந்ததும் போலியானதுமான உப்பு விற்பனை மோசடியும் தடுக்க முடியும்.

(சி)

## வடக்கு - கிழக்கில் தமிழ்மொழிமூல ஆசிரிய வெற்றிடங்கள் 8 ஆயிரம்

### தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் எண்ணாயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாகத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

உலக வங்கி பிரதிநிதிகளுக்கும், தமிழாசிரியர் சங்கத்துக்கும் இடையே நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றபேச்சுவார்த்தைகளின் போதே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாணத்திலும், அதற்கு வெளியேயும், மொத்தம் 15 ஆயிரம் தமிழ்மொழிமூல ஆசிரிய வெற்றிடங்கள் இருப்பதாகவும்,

இந்த வெற்றிடங்கள் வெகுவிரைவில் நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறும், தமிழாசிரியர் சங்கம் உலக வங்கியை கோரியுள்ளது.

(சி-4)

## தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்தோர் வருமானம் எதுவுமின்றி பரிதவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள கட்டடத்தொழிலாளர்கள் கூலிவேலை செய்பவர்கள், விவசாயிகள், சீவல் தொழிலாளர்கள் போன்றவர்கள் வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் தொழில் வாய்ப்புகள் இன்றி இருப்பதால் பெரிதும் கஷ்டப்பட்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணப்பொருட்களில் மட்டும் தங்கியிருப்பதில் பல்வேறு விதமான நடைமுறைப் பிரச்சினைகளை இத்தகையோர் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான இத்தகைய குடும்பங்களில் இருந்து பாடசாலை செல்கின்ற நிலையில இருக்கின்ற மாணவர்களுக்குப போதிய பாடசாலை உபகரணங்கள இல்லாமல் இருப்பதாகவும் அறியப்படுகிறது.

அதேவேளை வெளிநாட்டுப் பணத்தை மட்டும் நம்பியிருக்கின்ற ஏராளமான குடும்பங்களுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் வந்து சேராமையினால், செய்வது இன்னது எனத்தெரியாமல் அக்குடும்பங்கள் தவிக்கின்றன.

வருமானமெதுவும் இன்றி வறுமைநிலைக்குத் தள்ளப்பட்டு குடும்பங்கள் தமது நகைகளை மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்து தமது அன்றாட வாழ்க்கையை நடாத்திவருவதாகவும் தெரியவந்துள்ளது.

(சி-77)

## மனித வள அபிவிருத்தியில் இலங்கை சிறந்து விளங்குகிறது

### ஐ.நா. அ.தி திட்டப்பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்காசிய பிராந்தியத்தில் மனிதவள அபிவிருத்தியில் சிறந்து விளங்கும் நாடாக இலங்கை இனம்காணப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டப்பிரிவால் வெளியிடப்பட்ட இரண்டாயிரம் ஆண்டுக்கான மனிதவள அபிவிருத்தி தொடர்பான அறிக்கையிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தி சிறந்து விளங்கும் நாடுகளாக முதலாவதாக கனடாவும், இரண்டாவதாக நோர்வேயும், மூன்றாவதாக அமெரிக்காவும் இவ் அறிக்கையில் இனம்காணப்பட்டுள்ளது.

இந்தவரிசையில் தெற்காசிய நாடுகளான இலங்கை, மாலைதீவு ஆகியன முறையே 84 ஆம் 89 ஆம் இடங்களில் வைத்து நோக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் மேற்படி அறிக்கையில், அபிவிருத்தி மற்றும் பால் சமத்துவ அடிப்படையிலான கல்வி அபிவிருத்தி ஆகியவற்றில் இலங்கை, அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடப்பட்டிருப்பது இவ்வருட அறிக்கையின் சிறப்பம்சமாக கருதப்படுகிறது.

(உ)

யாழ்ப்பாண
நாவாந்துறைப் படிப்பகம்

ஞாலம் கருதினுங்
கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்
- குறள்

# வலம்புரி

## ஏகோபித்த குரலில்

இத்தனை காலம் இழுபட்ட இனப்பிரச்சினை இன்று தீரும் நாளை தீரும் என்றிருக்கையில் ஏகோபித்த குரல் ஒலிக்காதது கவலைக்குரியதே. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் நீரியல் கடல்வள அமைச்சர் புலிகள் இல்லாமல் எந்த ஒரு தீர்வும் பயனளிக்கப் போவதில்லை என்று யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு பேசியிருக்கிறார்.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்ற நாட்டோடிப்பழமொழியை மறந்து விடக் கூடாது தான். மழை விட்டும் தூவானம் மாறவில்லை என்றிருக்கக்கூடாது. திருவிழாக் காலங்களில் மூலமூர்த்தியோடு தான் பரிவார மூர்த்திகள் பவனி வருவதுண்டு. அது தான் விழாவின் முறையும் அழகும்.

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாஎன்றது போல இருசாராரும் இழுபறிப்படக்கூடாது. அதனால் அரசியல் தீர்வு இழுபடக்கூடாது. கடந்தகால அரசியல் தலைவர்கள் போலல்லாது முனைப்போடுதீர்வினைக் காண முனைந்து நிற்கும் ஜனாதிபதியும், புலிகளும் நியாயமான, நீதியான தீர்வுத் திட்டத்திற்கு தம்மை இட்டுச் செல்லுதே இன்றைய மக்களின் முடிவினைத் தீர்க்க வழியாகும்.

காலம் காலமாக இழுத்தடிப்புக்கள் செய்து நாடு சின்னா பின்னப்படுவதை எந்த ஒரு தீர்க்க தரிசன சிந்தையுள்ளவனும் ஏற்றுக் கொள்ளமாட்டான். இலவு காத்த கிளிகள் போல் ஏங்கும் இதயத்தோடு இனப்பிரச்சினைக்காய் காத்திருக்கும் தமிழன் ஏமாறக்கூடாது. வரலாற்று நிகழ்வுகளை உன்னிப் பார்க்க வேண்டும். கருத்து வேற்றுமைகள் கிளர்ந்தெழுந்த காரியங்களை சீர்தூக்கி உண்மையை உணர்ந்து உரியன செய்ய முன்வர வேண்டும்.

மக்களுக்காக செயற்படும் சம்பந்தப்பட்ட அனைவரும் சிந்தை நெகிழ்ந்து தொல்லை தவிர்க்க முன்வர வேண்டும். இன்றைய அவா நிலையைப் புரிந்து கொண்டு இனப்பிரச்சினைக்கு ஆரோக்கியமான முறையில் முற்றுப்புள்ளி வைக்க முனைதல் வேண்டும்.

வலம்புரி ஆசிரியர்

## இணுவிலில் இயங்குகிறது

(இணுவில்)

கைதடி ப. நோ. கூ. சங்கத்தின் தலைமைக்காரியாலயம் தற்பொழுது இணுவில் சந்திக்கு அருகாமையிலுள்ள அம்பிகாபதி வர்த்தக நிலையத்திற்கு முன்பாக இயங்கி வருகிறது.

மேற்படி சங்கம் முன்னர் உடுவில் பகுதியில் தனியார் வீடு ஒன்றில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# குரோஷ்னியில் தொடர் தாக்குதல்

# நூற்றுக்கும் மேற்பட்ட ரஷ்யபடை பலி

(குரோஷ்னி)

செச்சினியாவின் தலைநகர் குரோஷ்னியில் செச்சினியப் போராளிகளின் தாக்குதல் சம்பவங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் குரோஷ்னியில் அமைந்துள்ள உள்துறை அமைச்சகக் கட்டடத்தில் குண்டுவெடித்ததில் 60 இற்கும் அதிகமான ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டனர்.

இக்குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு தாமே காரணம் என செச்சினியப்போராளிகள் உரிமைகோரியுள்ளனர்.

வேறுபல தாக்குதல் சம்பவங்களிலும் ரஷ்யப் படையினர் பலத்த இழப்பினைச் சந்தித்திருப்பதாக மொஸ்கோ வட்டாரங்கள் ஒத்துக்கொண்டுள்ளன.

குரோஷ்னியின் எல்லைப் பகுதியில், ரஷ்யப் படையினர் மீதான தாக்குதல்களை மேலும் அதிகரிக்கும்வகையில் குண்டுத்தாக்குதல்கள் நடத்தும் ஆயுதங்களுடன் 500 இற்கும் மேற்பட்ட செச்சினியப் போராளிகள் தயார் நிலையில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (உ)

## பதுங்கு குழி ஒன்றிலிருந்து விமானப்படை வீரரின் சடலம் மீட்பு

### நீர்கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைய சுற்றாடலில் அமைந்துள்ள பாதுகாப்பு பதுங்கு குழி ஒன்றில் இருந்து விமானப்படை வீரர் ஒருவரின் சடலம் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட மேற்படி சடலம், பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த்த காலு ஓயாவைச் சேர்ந்த 25 வயதுடைய எச். எம். குசரால் குமார என்ற விமானப்படை வீரருடையது என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஓரிரு தினங்களுக்கு முன் பெற்றுக்கொண்ட சம்பளப் பணத்துடன் கடிதம் ஒன்றை எழுதி தன் உடுப்புப் பெட்டியில் வைத்துவிட்டு இவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டிருப்பதாகவும்.

பணத்தை பெற்றோரிடம் ஒப்படைக்கும்படியும், குடும்பத்தாரிடம் மன்னிப்புக் கோருவதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-உ)

## வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர் தகைமை; மதிப்பீடு செய்ய குழு நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் தகைமைபற்றி மதிப்பீடு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தின் போது பல்வேறு ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளதையடுத்து மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

இதே வேளை மாகாணக் கல்வி அமைச்சுக்கு எழுபத்தைந்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி-4)

## இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான உத்தேச அரசியலமைப்பு திட்டத்தில் ஐ. தே. க. வுக்கு உடன்பாடில்லை

### - டிரோன்பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை உள்ளடக்கிய உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தச்சட்டம்தொடர்பாக அரசு ஐக்கியதேசியக் கட்சியினிடையே இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாக வெளியான செய்திகளை ஐக்கிய தேசியக்கட்சி திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இதுதொடர்பாக ஐ தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஐ தே. கட்சிக்கும் அரசுக்கும் இடையே இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்பவருமான டிரோன் பெர்னாண்டோ கருத்துத்தெரிவிக்கையில், பிராந்திய ஒற்றுமைசுயாட்சி முறை என்ற எந்த நிலைப்பாட்டிற்கும ஐ தே. கட்சி உடன்படவில்லை ஆனால் அதிகாரப் பரவலாக்கம் சகலராலும் அங்கீகரிக்கப்படத்தக்க விதத்தில் அமையவேண்டும் என்னும் கருத்துக்கு உடன்பாடு தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ

## கடை உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டு

### நீர்வேலியில் ஊரடங்கு வேளையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு வேளையில் கடைஉடைத்து பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று நீர்வேலி கரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது; நீர்வேலியைச்சேர்ந்தசுப்பிரமணியம் இராசையா (ஐங்கரன்) 'ரஜனி களஞ்சியம்' என்ற பிரபலவர்த்தக நிலையத்தின் கதவுகளைஉடைத்து உள்நுழைந்த திருடர் கோஷ்டி ஒன்று அரிசி மூடைகள், மா மூடைகள், சோப் வகைகள், ரயர், ரியூப் உள்ளடங்க பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்களை திருடியதுடன் வாகனம்ஒன்றில் ஏற்றிச்சென்றுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இத்திருட்டுகுறித்து கோப்பாய் பொலிஸ்நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## தீமிதிப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம்- அரசடி வீதி, அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயிலில் எதிர்வரும் 7ஆம் திகதி தீமிதிப்பு நிகழவுள்ளது.

காலை 7 மணிக்கு பூசை ஆரம்பமாகும். பிற்பகல் பூசையைத் தொடர்ந்து அம்மன் வெளிவந்து தீமிதிப்பு இடம்பெறும் (சி)

## ஜப்பானின் புதிய பிரதமர் விரைவில் இந்தியா விஜயம்

(ரோக்கியோ)

ஜப்பானியப் பிரதமர் யசிரோமோரி அடுத்த மாதம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் அரச முறை விஜயம் செய்ய இருக்கிறார்

அவ்வேளை இந்த இரண்டு நாடுகளும் அணு ஆயுதப் பரிசோதனைத் தடை உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்வார் என்று சொல்லப்படுகிறது.

யசிரோமோரி மீண்டும் நேற்று பிரதமராகப் பதவி ஏற்றுக் கொண்டார் இந்தியாவும் பாகிஸ்தானும் அணு வாயுதத் தடை ஒப்பந்தம் இல் கைச்சாத்திடும் வரையில் அவற்றிற்கு எதிராக இரண்டு வருடகால தடைகளை நீக்கப்போவதில்லை என்று ஜப்பானிய அரசாங்கம் சொல்லிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## விரைவில் சுதந்திர பாலஸ்தீனம் உருவாக்கும் முயற்சியில் அரபாத்

(யெருசலேம்)

இஸ்ரேலுடன் இறுதிச் சமாதானம் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் இந்த ஆண்டு இறுதிக்குள் சுதந்திர பாலஸ்தீன நாட்டை பிரகடனம்செய்யும் திட்டமொன்றை பாலஸ்தீனத்தலைவர்கள் அங்கீகரித்துள்ளனர்.

காஸாவில் மேற்குக்கரைப் பகுதியில் சுதந்திர பாலஸ்தீனநாடு அமைக்கப்படுவதை காஸாவில் ஜாசிர் அரபாத அண்மையில நடைபெற்ற கூட்டத்தில் 129 பேர் கொண்ட பாலஸ்தீன மத்திய சபை ஆமோதித்தது.

இதனிடையே செப்டெம்பரில் இறுதி ஒப்பந்தம் செய்து கொள்ள பாலஸ்தீனியர்களும் இஸ்ரேலியர்களும் முயன்று வருகிறார்கள என்று செய்திகள் தெரிவிக்கின்றன. [து]

## குவைத்தில் வெடிவிபத்து 5பேர் பலி; 50 பேர் வரையில் காயம்

(குவைத்)

குவைத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஒன்றில் அண்மையில் ஏற்பட்ட எதிர்பாராத வெடிவிபத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர்வரையில் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதி முழுவதும் ஒரே புகை மண்டலமாக காணப்படுவதாகவும் தீயணைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து துரித விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தரப்புச்செய்திகள்தெரிவிக்கின்றன

இச்சம்பவத்தை அடுத்து அந்நாட்டு எண்ணெய் வளத்துறை அமைச்சர் ஷேக் சௌத் நஸர் தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (க-து)

## மூன்று ரூபாவாக உயர்த்தப்பட்ட பஸ் கட்டணத்தை இரண்டு ரூபாவாக்க அமைச்சர் அலவி கோரிக்கை

(கொழும்பு)

மூன்று ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ள பஸ் கட்டணத்தை முன்னர்போல் இரண்டு ரூபாவாகக் குறைக்குமாறு தான் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ எச். எம். பௌஸியிடம் நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளதாக உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

அதேவேளை அரசாங்க மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பள உயர்வு சம்பந்தமாகவும் அரசாங்கத்திடம் தான் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இப்பிரச்சினைகளுக்கு உரிய நிவாரணம்வழங்குவாரெனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சாவகச்சேரிப் பகுதியில் மோதல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மூவர் காயமடைந்திருப்பதாகவும் விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இம்மோதலின் போது புலிகள் தரப்பில்பலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது (உ)

# யாழ்ப்பாணத்தில் புதிய பத்திரிகையாளர் சங்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் மிக விரைவில் புதிய பத்திரிகையாளர் சங்கம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சட்டரீதியான பத்திரிகையாளர் சங்கம் இங்கு இல்லாததனாலும் சங்கம் எனக் கூறிக்கொள்ளும் சில செய்தியாளர்கள் ஒழுங்கற்று நடப்பதாலும் புதிய பத்திரிகையாளர் சங்கம் ஆரம்பிக்கப் படவேண்டியதன் அவசியம் பற்றிப் பலரும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இப்புதிய சங்கத்தில் யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய்ப் பிரிவு ஆகியவற்றில் இதழியல் பயிற்சி பெற்ற அனைவரும் இணையமுடியுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆர்வமுடையோர் இம்மாதம் 15ந் திகதிக்கு முன்னர் அமைப்புக்குழு, புதிய பத்திரிகையாளர் சங்கம் இலக்கம் 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் அமைப்புக்குழுவினர் கேட்டுள்ளனர்.

(ந)

# பயிற்றப்படாத ஆசிரியர்களின் மறியற் போராட்டம் நேற்றுடன் முடிவு

ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதி கிடைக்காத பயிற்றப்படாத ஆசிரியர்களின் மறியற் போராட்டம் நேற்று நண்பகலுடன் முடிவிற்கு வந்தது.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா இது விடயம் தொடர்பாக தாம் உரியவர்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அதுவரை போராட்டத்தை நிறுத்துமாறும் விடுத்த வேண்டுகோளை அடுத்து மேற்படி போராட்டம் கைவிடப்பட்டது.

இப்போராட்டத்தையடுத்து சம்பந்தப்பட்ட ஆசிரியப்பிரதிநிதிகளுக்கும், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் நா. தணிகாசலம்பிள்ளைக்குமிடையில் சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதி பெறாத 240 ஆசிரியர்களையும் உள்வாங்க கூடிய சந்தர்ப்பம் உண்டு என்றும் இது பற்றி அஞ்சவேண்டியதில்லை என்றும் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வலியுறுத்திக் கூறினார்.

(க-12)

# தப்பியோடிய 152 படையினர் கைது

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களில் சுமார் 152பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இராணுவத்தினர் களுத்துறை நுகேகொட, பாணந்துறை, கல்கிசை போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இத்தேடுதல்வேட்டையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஈடுபட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்றில் விசாரணைகள் நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-4)

## உணவுப்பொருள்...

பொதுத் தேர்தலை முன்னிட்டு தொகுதிகள் தோறும் இளைஞர் அணிகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொகுதிதோறும் அமைக்கப்படவுள்ள இளைஞர் அணி ஒவ்வொன்றிலும் 500 இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## பூநகரி...

கைது இடம் பெற்றதாகவும் இதுகுறித்துயாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னையா சிவநேசன் என்பவரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவராவர்.

இவரது கைது குறித்து இராணுவத்தினரால் ரசீது எதுவும் வழங்கப்படவில்லை என்றும் அறியப்படுகிறது.

(க-12)


## மரண அறித்தல்

### சரவணமுத்து அப்பாத்துரை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

ஈஸ்வரிவாசம் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சரவணமுத்து அப்பாத்துரை அவர்கள் 04-07-2000 நேற்று காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் கணேசமூர்த்தி (CTB) சுந்தரமூர்த்தி (UK) ஆகியோரின் அன்புத்தந்தையும் ராணிமலர், சாரதாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுலறாயன், டுனேஸ் கேசவன், டிபாகரி, கோகுலன், சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரதுஇல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்

ஈஸ்வரி வாசம்
அளவெட்டிதெற்கு
அளவெட்டி

கணேசமூர்த்தி
(மகன்)
(1501)


# இன்று மணிவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

மணிவாசகர் குருபூசையை முன்னிட்டு இன்று காலை 8மணிதொடக்கம் ஆனைக்கோட்டை அன்பகத்தில் மணிவாசகப் பெருமானின் திருவாசகப் பாராயணமும் அதனைத் தொடர்ந்துமகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (க)

## ஐக்கிய...

யல சில தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

(ச-வ)

## அமைச்சா...

சர் ஜஸ்வந்சிங்கையும் மற்றும் பல இந்தியத் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளதாக ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதுடில்லி சென்றுள்ள அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் இடம்பெற்றுள்ள அதிகாரப் பகிர்வு யோசனைகள தொடர்பாகப் பிரதமர் வாஜ்பாய்க்கும், வெளியுறவு அமைச்சர் மற்றும் தலைவர்களுக்கும் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் யுத்தம் தீவிரமடைந்த போது இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரதி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல ஆகியோர் இந்தியா சென்று நிலைமையை விளக்கிய பின் இலங்கை திரும்பியிருந்தது தெரிந்ததே.

இதனையடுத்து இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் இலங்கை வந்திருந்ததும் அதனைத் தொடர்ந்து தற்போது லக்ஷ்மன் ஜெயக்கொடி ஜனாதிபதியின்விசேட தூதுவராக இந்தியா சென்றிருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். (வ)

## நாகர்கோவிலில்...

மோதல் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலின் போது விடுதலைப்புலிகளின் பதுங்குகுழிகளை படையினர் அழித்ததாகவும் அதிகளவான புலிகள் உயிரிழந்ததாகவும் ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

படையினர் தரப்பில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட இரு படையினர் உயிரிழந்ததாகவும் 3 அதிகாரி உட்பட 37 படையினர் காயமடைந்துள்ளதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

இந்த மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது ஆயினும் விடுதலைப்புலிகள் தரப்பில் இம்மோதல் தொடர்பாக நேற்று இரவு வரை எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## சிறுவர் ...

யின் செயலாளர் செல்டன் எ. பெரேரா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வை விரும்பாத குழுக்களின் செயலே சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தகைக் குண்டுத் தாக்குதல்களாகும் இத்தகைய குண்டுத் தாக்குதல்களை தாம் வன்மையாக கண்டிப்பதுடன் எதிர் காலத்தில் இத்த சம்பவம் நிகழாது அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

# செய்தி ஊடகவியலாளர்களே சுயதணிக்கையை செய்ய வேண்டும்

## ஆரிய ரூபசிங்க தகவல்

தேசிய நலனைப் பாதுகாப்பதற்கும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவுமே செய்தித் தணிக்கை மேற்கொள்ளப் படுகிறது என்றும், இதில் அரசியல் உள்நோக்கம் எதுவுமில்லை என்றும் தகுதி வாய்ந்த அதிகாரி ஆரியரூப சிங்க நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற இம் மாநட்டில பத்திரிகைகளின் ஆசிரியர்கள், மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

இம் மாநாட்டில் ஆரியரூபசிங்க மேலும் தகவல் தருகையில் புதிய சட்டத்தின் பிரகாரம் செய்திகளை தகுதி வாய்ந்த அதிகாரிக்குஅனுப்பி வைக்க வேண்டியதில்லை ஊடகவியலாளர்கள் தற்போதைய தணிக்கையின் கீழ் விழிப்புணர்வுடன் நடந்து கொண்டு தறபோதைய யுத்த நிலையைக் கருத்திற்கொண்டு சுயதணிக்கையை மேற் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். (வ)

# மன்னாரில் துண்டுப் பிரசுரங்கள்

(மன்னார்)

இன்று நடைபெறும் கரும்புலிகள் தினத்திற்காக மன்னார் நகரிலுள்ள கடைகள், அரச அலுவலகங்கள் என்பவற்றை மூடுமாறு கோரும் துண்டுப் பிரசுரங்கள் அங்கு நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடையவை எனக்கருதப்படும் இத்துண்டுப் பிரசுரங்கள் தவிர கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் பதாதைகளும் கட்டப்பட்டிருந்ததாகவும் பின்னர் அவை அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிளிநொச்சியில் மேலும் இரண்டு எலும்புக் கூடுகள் கண்டுபிடிப்பு

(வவுனியா)

கிளிநொச்சி மூன்றாம் வாய்க்கால் பகுதிக் காணி ஒன்றிலிருந்து இரண்டு எலும்புக்கூடுகள மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணி ஒன்றைத் துப்பரவு செய்தபோதே இவ்வெலும்புக் கூடுகள் கைகள் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வெலும்புக் கூடுகள் கிளிநொச்சி மருத்துவமனையில மருத்துவ ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் மக்கள் அடையாளம் காண்பதற்கு வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(ந-7)

## சாவகச்சேரி...

மக்கள் சென்றபோதும் மீசாலைப் பகுதியில் உள்ள இராணுவத்தினர் அனுமதி மறுத்ததினால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

அதிகளவு பணம் கொடுத்து வாகனங்களை வாடகைக்கு எடுத்துச் சென்றதனால் இருந்த பணத்தையும் இழந்ததே மிச்சம் என்றார் பாதிக்கப்பட்ட ஒருவர். (வ)

## கப்பல்...

யான இலக்கங்களுக்கு நாளை வியாழக்கிழமை பயணச்சீட்டு வழங்கப்படுமென யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை பயணம் குறித்து சிவில் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளும் பொதுமக்களுக்கு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணிவரையும், மெசஞ்சுமார் மற்றும் அரச ஊழியர்களுக்கு பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திப்பு இடம் பெறாதெனவும் சிவில் நிர்வாக அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# உயிரிழந்த புலிகள் விபரம்

(வவுனியா)

தென்மராட்சிப் பகுதியிலும் மூதூரிலும் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதலின்போது தமது தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:-

- ராதை/அருளரசி (ஸ்ரீகந்தசாமி - ஸ்ரீராதை) யாழ்ப்பாணம்
- இன்சுடர் (நவரெட்ணராஜா-ஜெகதீஸ்வரன்) மூதூர் எல்லைப் படையினரான
- செந்தில்நாதன் (சுப்பிரமணியம் - செந்தில் நாதன்) கிளிநொச்சி

## கரும்புலிகள்...

மட்டக்களப்பு நகரில் வழமைக்கு மாறாக சோதனைகளும் அதிகரித்துள்ள அதேவேளை கேந்திர இடங்களில் திடீரென வந்திறங்கும் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் குறிப்பாக மட்டக்களப்பு திருமலை வீதி கடும் சோதனைக்கு படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ச-வ)


## வாழ்த்துகின்றோம்

அகில இலங்கைச் சமாதான நீதிவானாக உயர்வு பெற்றுள்ள, எமது இசைத்துறைத் தலைவரும், கவின்கலை மன்றத்தின் காப்பாளருமாகிய

### திரு.ந.வி.மு. நவரெத்தினம் (M.Phil)

அவர்களைப் பல்லாண்டுகாலம் வாழ்க என மனதார வாழ்த்துகின்றோம்.

கவின்கலை மன்றம்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(1495)


இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தில் உள்ள விலாசத்தில் அமைந்துள்ள அச்[illegible] 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.